රාජ්‍ය පරිපාලන හා කළමනාකරණ අමාත්‍යාංශය
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
MINISTRY OF PUBLIC ADMINISTRATION AND MANAGEMENT

ඒකාබද්ධ සේවා අංශය இணைந்த சேவைகள் பிரிவு COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතනය தொலைபேசி: (94) 011- 2694560 Telephone
ෆැක්ස් தொலைநகல்: (94) 011- 2692254 Fax
ඊ-මේල් மின்னஞ்சல்: dgcs@pubad.gov.lk E-mail
වෙබ් අඩවිය இணைத்தளம்: www.pubad.gov.lk Web Site

මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/05/03/01

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி / Date: 2016.06.10

அனைத்து அமைச்சின் செயலாளர்கள்/
திணைக்களத் தலைவர்கள்/
மாவட்டச் செயலாளர்களிற்கு

**<u>வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சையிற்கு சலுகை வழங்குதல் – அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை</u>**

குறித்த விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 03/2016 இன் மீது உமது அவதானத்தைக் கொண்டு வருகிறேன்.

02. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப்பிரமாணக் குறிப்பிற்கிணங்க ஒரு வருடத்திற்கு இரு தடவைகள் வினைத்திறமை காண் தடை தாண்டல் பரீட்சையை நடாத்த வேண்டியிருந்தாலும் தற்போதைக்கு ஒரு தடவை மாத்திரமே இப்பரீட்சை இடம் பெற்றிருப்பதால் மேற்குறித்த சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைவாக மேலும் இதற்குச் சமனான பரீட்சைத் தடவைகள் 5 இனை அபிவிருத்தி உத்தியோகத்தர்களிற்கு பெற்றுக் கொடுக்க வேண்டிய நிலையுள்ளது.

03. இதன்படி, அவர்களுக்குரித்த தடவைகளுக்குட்பட்டு முதலாம் வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்ததன் பின்னால் மாத்திரம் அது தொடர்பான சலுகைக் காலத்தைப் பெற்றுக் கொள்ளல் சம்பந்தமான கோரிக்கைகளை அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 02/2011(i) இனால் திருத்தப்பட்ட EC( EST 7) படிவத்தின் படி எனக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் அறியத் தருகிறேன்.

04. அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான முதலாம் வினைத்திறமைகாண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைவதற்கான சலுகைக் காலத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சு/ திணைக்களங்களினூடாக தற்போது கோரிக்கைகள் கிடைத்துக் கொண்டிருப்பதால் மேற்குறிப்பிட்டதற்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உரிய விடயம் தொடர்பான அலுவலர்களை அறிவுறுத்துமாறு வேண்டிக் கொள்கிறேன்.

ஒப்பம்./ கே.வீ.பீ.எம்.ஜே. கமகே
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

அபிவிருத்தி உத்தியோகத்தர் தொடர்பான கடிதங்களை அனுப்புகையில் அவர்களது நியமனக் கடித இலக்கத்தை (CS/DOS/XXXXX) குறிப்பிட்டு அனுப்புமாறு தயவுடன் வேண்டுகிறேன்.